பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

05 03 2025 **WEDNESDAY** 7 15 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கென மரபணு வங்கி ஏற்படுத்தப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.
2. உத்ராகண்ட்டில் 6 ஆயிரத்து 800 கோடி ரூபாய் செலவில் இரண்டு ரோப்கார் திட்டங்களை செயல்படுத்துவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
3. அரசு திட்டங்களை செயல்படுத்துவதில் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
4. காபூல் விமான நிலைய குண்டுவெடிப்பு சம்பவத்திற்கு காரணமான தீவிரவாதி கைது செய்யப்பட்டிருப்பதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் கூறியுள்ளார்.
5. டேபிள் டென்னிஸ் போட்டிகளில் பங்கேற்பதிலிருந்து இம்மாத இறுதியில் ஓய்வு பெறுவதாக இந்தியாவின் சரத் கமல் அறிவித்துள்ளார்.

<<<<<>>>>>

உணவு பாதுகாப்பை உறுதி செய்வதற்கென மரபணு வங்கி ஏற்படுத்தப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

பட்ஜெட்டுக்கு பிந்தைய இணைய கருத்தரங்கில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

மரபணு ஆதாரங்களை பாதுகாப்பதற்கும் இது உதவிடும் என்று அவர் தெரிவித்தார்.

மரபணு வங்கியை ஏற்படுத்துவதற்கான அறிவிப்பு மத்திய பட்ஜெட்டில் இடம்பெற்றிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் இரண்டாவது மரபணு வங்கியாக இது திகழும் என்றும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<>>>>>

உத்ராகண்ட் மாநிலம், **Sonprayag -** கேதர்நாத் இடையே ரோப்கார் அமைக்கும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், 12 புள்ளி ஒன்பது கிலோமீட்டர் தொலைவுக்கு, 4 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் இந்த ரோப்கார் வழித்தடம் அமைக்கப்படவுள்ளதாக கூறினார்.

இதன்மூலம், யாத்ரிகர்களின் பயண நேரம் 8-லிருந்து 9 மணி நேரம் என்பது 36 நிமிடமாக குறையும் என்று அவர் தெரிவித்தார்.

மூத்த குடிமக்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும் இந்த திட்டம் பேருதவியாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

**Govindghat - Hemkump Sahib** ரோப்கார் திட்டத்திற்கும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

2 ஆயிரத்து 730 கோடி ரூபாய் செலவில் இந்த திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாகவும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

மத்திய அமைச்சரவையின் இந்த முடிவுகளுக்கு உத்ராகண்ட் முதலமைச்சர் திரு. **Pushkar Singh Dhami** வரவேற்பு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் விடுத்துள்ள செய்தியில், இந்த திட்டங்கள், யாத்ரிகர்களுக்கும், சுற்றுலாப் பயணிகளுக்கு பெரும் உதவிகரமாக இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

அரசு திட்டங்களை செயல்படுத்துவதில் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய இணையமைச்சர் திரு. எஸ்.பி. சிங் பாஹெல் கூறியுள்ளார்.

மகளிர் நட்புணர்வு மாதிரி கிராம பஞ்சாயத்தை ஏற்படுத்தும் இயக்கத்தை இன்று புதுதில்லியில் தொடங்கி வைத்து அவர் பேசினார்.

உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் அரசு திட்டங்களின் நெறிமுறைகளை முழுமையாக கடைபிடிக்க வேண்டும் என்று அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி. அனுப்பிரியா பட்டேல், மகளிர் முன்னேற்றத்தை அடிப்படையாக கொண்ட வளர்ச்சிக்கு மத்திய அரசு முக்கியத்துவம் அளித்துள்ளதாக தெரிவித்தார்.

<<<<<>>>>>

ஆந்திர முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷாவை இன்று புதுதில்லியில் சந்தித்து பேசினார்.

அம்மாநிலத்தின் வளர்ச்சி தொடர்பான திட்டங்கள் குறித்து இந்த சந்திப்பின் போது விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி ஆகியோரையும் திரு. சந்திரபாபு நாயுடு சந்தித்துப் பேசினார்.

<<<<<>>>>>

இந்திய ரயில்வே நிதி கழகத்திற்கு நவரத்தின அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது, நிறுவனத்தின் நிதி கட்டமைப்பு வலுவாக உள்ளதை உணர்த்துவதாக அதன் தலைவரும் நிர்வாக இயக்குநருமான திரு. மனோஜ்குமார் துபே தெரிவித்துள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நிதி ஆதாரங்களை திரட்டுவது, கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது மற்றும் நவீனமயமாக்கப் பணிகளில் இந்த நிதிக் கழகம் முக்கியப் பங்காற்றுவதாக அவர் கூறினார்.

நிறுவனத்தின் செயல்திறனை மேலும் அதிகரிக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் திரு. மனோஜ்குமார் துபே தெரிவித்தார்.

<<<<<>>>>>

குடியரசுத்தலைவர் மாளிகையில் வருடாந்திர கலாச்சாரத் திருவிழாவை குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று தொடங்கி வைத்தார்.

கலாச்சார பரிமாற்றத்தின் முனையமாக குடியரசுத்தலைவர் மாளிகை திகழ வேண்டும் என்ற நோக்கில் இந்த திருவிழா நடத்தப்படுவதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

நடப்பாண்டில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கைவினைக் கலைஞர்கள் உற்பத்தி செய்த பொருட்கள் இந்த திருவிழாவில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

<<<<<>>>>>

தமிழகத்தில் பண்ணைக் குட்டையில் மூழ்கி உயிரிழந்த இருவரின் குடும்பத்தினருக்கு தலா 3 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கிருஷ்ணகிரி மாவட்டம், ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மூன்றாம் வகுப்பு படித்து வந்த மாணவன், பள்ளிக்கு அருகே தனியாருக்கு சொந்தமான பண்ணைக்குட்டையில் தவறி உயிரிழந்ததை சுட்டிக்காட்டியுள்ளார்.

மாணவனை காப்பாற்ற முயன்ற தலைமையாசிரியரும் உயிரிழந்ததாக கூறியுள்ள முதலமைச்சர், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

ஹிமாச்சலப்பிரதேசத்தில், போதைப்பொருள் பழக்கத்தினால் ஏற்படும் தீமைகள் குறித்த விழிப்புணர்வு குறும்படத்தை அம்மாநில ஆளுநர் திரு. **Shiv Pratap Shukla** இன்று வெளியிட்டார்.

சிம்லாவில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில் பேசிய அவர், குறும்படத்தை தயாரித்த குழுவினருக்கு பாராட்டு தெரிவித்தார்.

போதை பழக்கத்தால் ஏற்படும் தீமைகளை எடுத்துரைக்க இளையோர் முன்வர வேண்டும் என்றும் திரு. **Shiv Pratap Shukla** கேட்டுக் கொண்டார்.

<<<<<>>>>>

தில்லி, யமுனை ஆற்றிலிருந்து கடந்த பத்து நாட்களில் மட்டும் ஆயிரத்து 300 டன் குப்பைகள் அகற்றப்பட்டுள்ளதாக பாசனத்துறை அமைச்சர் திரு. பர்வேஸ் சாகேப் சிங் கூறியுள்ளார்.

இன்று யமுனை ஆற்றில் ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

இந்த ஆற்றில் படகுப் போக்குவரத்தை தொடங்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

யமுனை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் திரு. பர்வேஸ் சாகேப் சிங் கூறினார்.

**<<<<<>>>>>**

காபூல் விமான நிலையத்தில் 2021ஆம் ஆண்டு நேரிட்ட குண்டுவெடிப்பு சம்பவத்திற்கு காரணமான தீவிரவாதி கைது செய்யப்பட்டிருப்பதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்க நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் அவர் இதற்கான அறிவிப்பை வெளியிட்டார்.

இந்த தாக்குதல் சம்பவத்தில் அமெரிக்காவைச் சேர்ந்த 13 பேர் உட்பட பலர் உயிரிழந்ததை அவர் சுட்டிக்காட்டினார்.

தீவிரவாதிக்கு உரிய தண்டனை கிடைப்பதை அமெரிக்க அரசு உறுதி செய்யும் என்றும் திரு. டொனால்டு ட்ரம்ப் கூறினார்.

**<<<<<>>>>>**

பங்களாதேஷ் இடைக்கால அரசின் ஆலோசகராக திரு. **Chowdhury Rafiqul Abrar** பதவியேற்றுக் கொண்டார்.

டாக்காவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அந்நாட்டு அதிபர் திரு. **Mohammed Shahabuddin** அவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

திரு. **Chowdhury Rafiqul Abrar**–க்கு கல்வித்துறை ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, இடைக்கால அரசிற்கான ஆலோசகர்களின் எண்ணிக்கை 23–ஆக அதிகரித்துள்ளது.

**<<<<<>>>>>**

டேபிள் டென்னிஸ் போட்டிகளில் பங்கேற்பதிலிருந்து இம்மாத இறுதியில் ஓய்வு பெறுவதாக இந்தியாவின் சரத் கமல் அறிவித்துள்ளார்.
சென்னையில் வரும் 25ஆம் தேதி தொடங்கி, 30ஆம் தேதிவரை நடைபெறவுள்ள சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியே தாம் பங்கேற்கவுள்ள கடைசிப் போட்டி என்று அவர் அறிவித்துள்ளார்.
காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் 7 தங்கப்பதக்கங்களையும், ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் 2 வெண்கலப்பதக்கங்களையும் வென்றுள்ள சரத் கமல், ஐந்து முறை ஒலிம்பிக் போட்டிகளிலும் பங்கேற்றுள்ளார்.

**<<<<<>>>>>**

**Orleans** மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி மற்றும் பிரணாய் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.
ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டங்களில் ஆயுஷ் ஷெட்டி, 21-17, 21-9 என்ற செட்கணக்கில் சிங்கப்பூரின் **Kean Yew Loh**–ஐயும், பிரணாய் 21-11, 20-22, 21-9 என்ற செட்கணக்கில் சீன தைபேயின் **Tzu Wei Wang** –ஐ வென்றனர்.

<<<<<>>>>>

**Prague** சர்வதேச செஸ் போட்டியின் ஆறாவது சுற்று முடிவில் இந்தியாவின் பிரக்ஞானந்தா மற்றும் அரவிந்த் சிதம்பரம் முதலிடத்தில் நீடிக்கின்றனர்.

<<<<<>>>>>

நியூஸிலாந்து ஓப்பன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Abhay Singh** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல்சுற்று ஆட்டத்தில் அவர், 11-6, 7-11, 12-10, 11-4 என்ற செட்கணக்கில் இங்கிலாந்தின் **Tom Walsh**–ஐ வென்றார்.

<<<<<>>>>>

ஆசிய மகளிர் கபடி சாம்பியன் போட்டிக்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.
இப்போட்டி ஈரானில் நாளை தொடங்கி, வரும் 8ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

<<<<<>>>>>

வதோதராவில் நடைபெற்ற சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில், 12 தங்கம் உட்பட 45 பதக்கங்களை வென்ற இந்திய அணிக்கு மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா பாராட்டு தெரிவித்துள்ளார்.

<<<<<**END**>>>>>